PDNL

# PALAYAMKOTTAI DIOCESE NEWS LETTER

Vol.52 JANUARY 2025 No. 04



*Happy New Year 2025!*

*May Mary, the Mother of God,*
*guide us closer to Jesus and help us experience*
*His peace, joy, and blessings always.*

## Grotto Blessing, Innacinadanur, 07.12.2024





## Confirmation Mass, St. Francis Xavier's Cathedral, Palayamkottai, 08.12.2024





## Pastor's Day, Catholic Bishop's House, KTC Nagar, 14.12.2024





# BISHOP SPEAKS

Dear Rev. Fathers, Sisters, Brothers and my beloved Lay Faithful,

Greetings of peace in the name of Jesus, the Prince of peace!"

For everything there is a season, and a time for every matter under heaven: a time to be born, and a time to die; a time to plant, and a time to pluck up what is planted" (Ecc. 3:1-2). As we stand on the threshold of a brand-new year, we are reminded that time is a precious gift from God. Each year brings with it a fresh opportunity to grow, heal, and deepen our trust in Him. The New Year 2025, celebrated as the Ordinary Jubilee Year of Jesus' birth, declared by our beloved Holy Father, Pope Francis, calls us to anchor our lives in hope. This hope, embodied in the Jubilee motto "Pilgrims of Hope," is one that does not disappoint (cf. Rom 5:5).

The year 2025 offers us a moment for reflection, renewal, and a hopeful outlook on what lies ahead. Through the words of the prophet Isaiah, our heavenly Father reassures us: "Remember not the former things, nor consider the things of old. Behold, I am doing a new thing; now it springs forth, do you not perceive it?" (Is 43:18-19). This is an invitation to leave behind the challenges of the past and embrace the possibilities of a new beginning with faith and optimism.

As the ancient Greek philosopher Plato reminds us in "*The Republic*", "The beginning is the most important part of any work." With this in mind, it is vital to approach the year ahead with a clear vision and a steadfast commitment to nurturing hope. Let us heed Pope Francis' call to make this Jubilee Year a journey as true pilgrims of hope, trusting in God's providence and the promise of His unending love.

The theme of the 2025 Jubilee Year for the Catholic Church is "Pilgrims of Hope." This is the Holy Year of Jubilee, which happens every 25 years. Pope Francis has chosen the theme to encourage people to share the hope of their faith in a world that is suffering from war, poverty, climate change, and the effects of the COVID-19 pandemic. The Pilgrims of Hope Jubilee presents each one of us with an opportunity to reignite the flame of our faith in our own hearts and to share the light of that faith with those in darkness.

Holding on to hope is known to strengthen patience and build resilience. Viktor Frankl, in his book "*Man's Search for Meaning*," illustrates its life-saving value through the experiences of survivors of concentration camps. This idea supports Emily Dickinson's view of hope as "the thing with feathers... that perches in the soul, and sings the tune without the words, and never stops at all." Those with hope proficiency, even when faced with an incurable illness or a formidable foe or a very hopeless war, won't allow despair and futility to dampen their spirit. They turn to yet another of hope's coping mechanisms – prayer – which provides consolation, grace and stability. Another key function of hope lies in looking at the big picture. As Martin Luther King Jr. saw it: "We must accept finite disappointments but never lose infinite hope."

In the Bible, it is written: "But those who hope in the Lord will renew their strength. They will soar on wings like eagles; they will run and not grow weary, they will walk and not be faint" (Is. 40:31). As the Psalmist says, "The Lord delights in those who fear him, who put their hope in his unfailing love" (Ps. 147:11), we need to put our hope in His unfailing love which will redeem us eventually. If any of you are feeling uncertain about this new year, take it one step, one moment at a time, without trying to

figure out God's detailed plan for you. You can trust that His word and promises are valid and that He has a plan. "For I know the plans I have for you, declares the Lord. Plans to prosper you and not to harm you, plans to give you hope and a future" (Jer. 29:11).

Hope is so powerful. True hope comes from believing in and having faith in Jesus Christ. Hope can do so many positive things for us, and starting a new year focused on God and His Son, Jesus Christ, will give each of us hope, which in turn can lead to great things. Hope can: bring joy and peace in times of trouble; replace our fears with courage and strength; replace our doubt with confidence and assurance; give us patience during seasons of uncertainty; increase our desire to endure rather than to quit; motivate us to do the work God has called us to do.

As we begin this new year, let us take a moment to look for the new opportunities Jesus places in our path to love him, with renewed hope and trust. I would end recalling to my mind the noble words of St Paul, "May the God of hope fill you with all joy and peace in believing, so that by the power of the Holy Spirit you may abound in hope" (Rom. 15:13). What the new year brings to you will depend a great deal on what you bring to the new year. As we enter the new year, let us embrace hope. Stepping into the coming year with hope signifies our confidence that God goes before us. Regardless of the valleys we may encounter, we have numerous reasons to be thankful. I wish you all a year filled with hope that resonates with the Church's jubilee celebrations, inviting each of us to be a pilgrim of hope.

With my cordial blessings.

Yours devotedly in Our Lord,

**+ S. Antonysamy**

Bishop of Palayamkottai

# BISHOP'S ENGAGEMENTS

**January - 2025**

| Date | Time | Programme |
|---|---|---|
| 01.01.2025 | | New Year - Bishop's House |
| 02.01.2025 | 10.30 a.m. | Memorial Mass, Vandanam |
| 03.01.2025 | 10.00 a.m. | Marriage Mass, T.Kallikulam |
| 04.01.2025 | 07.00 p.m. | Jubilee 2025 Mass, Kamanayakkanpatti |
| 05.01.2025 | 10.00 a.m. | Marriage Mass, Jawahar Nagar |
| | 06.30 p.m. | Jubilee 2025 Mass, Tenkasi |
| 07.01.2025 | | Madurai |
| 08.01.2025 | Morning | Clergy Monthly Recollection, Madurai |
| | Evening | Education Committee Meeting, Madurai |
| 09.01.2025 | | Clergy Monthly Recollection, Palayamkottai |
| 10.01.2025 - 12.01.2025 | | Pastoral Visit, Sendamaram |
| 14.01.2025 | 07.00 a.m. | Feast Mass, Shanthi Nagar |
| 15.01.2025 | 10.30 a.m. | Mass and Blessing of Good News Centre, Munjikkal |
| | 06.30 p.m. | Feast Mass, Kavirayapuram |
| 17.01.2025 | 05.30 p.m. | Silver Jubilee of Pillar Centre, Madurai |
| 18.01.2025 | 11.00 a.m. | SMMI Golden Jubilee, Puliampatti |
| | 06.00 p.m. | Blessing of the Renovated Church, Duraisamiyapuram |

| Date | Time | Programme |
|---|---|---|
| 19.01.2025 | 09.00 a.m. | Feast Mass, Surandai |
| | 03.00 p.m. | Arockia Annai Church Blessing, Ullar |
| 20.01.2025 | 11.30 a.m. | Golbing Hostel Blessing, K.Pudur |
| 21.01.2025 - 22.01.2025 | | TNBC Half Yearly Meeting, Pillar |
| 24.01.2025 | 11.00 a.m. | SC/ST Commission Meeting, Jubilee Pastoral Centre |
| | 06.30 p.m. | Altar Blessing, Nalankurichi |
| 25.01.2025 | 06.45 a.m. | Mass, SHJ Generalate |
| | 12.00 Noon | Mass, Kamanayakkanpatti |
| | 06.00 p.m. | Feast Mass, Vellalankottai |
| 27.01.2025 - 06.02.2025 | | CCBI Meeting, Bhubaneswar |

***Secretary to the Bishop***
***Cell No. 9488534455***

## FROM VICAR GENERAL'S DESK



**Announcements**



**Recollection**

Recollection for the month of January will be held on 09th January 2025.

10:00 am – Eucharistic Adoration

11:00 am – Tea

11:30 am – Talk, Announcements

01:00 pm – Lunch

Yours devotedly in Christ,
**Rev. Fr. G. Kulandairaj**
Vicar General

# ANNIVERSARIES

## BIRTHDAYS




01/01 Fr. Antony A. Cruz

02/01 Br. Nazarene D. SM

05/01 Fr. Antonyraj S.

12/01 Fr. Motcharajan M.

14/01 Fr. Victor Antonyraj SDB

15/01 Fr. Edwin Raj. J

15/01 Fr. Lourdu Maria Sudhan. S

17/01 Fr. Gnana Dhinagaran. A

18/01 Fr. Arockiasamy A. SVD

20/01 Fr. Aloysius Durairaj L.

25/01 Fr. Vinoth Paulraj S.

27/01 Fr. Arul Arasu A.

28/01 Fr. Sengole Thomas G.

30/01 Fr. Alphonse Nishant I.

30/01 Fr. Victor Raj. M

Dear Rev Brother & Fathers,

On your special day, it is our privilege to appreciate your valuable ministry for the people of God. May God shower His grace upon you on this birthday!

"MANY MORE HAPPY RETURNS OF THE DAY"



## ORDINATION DAY

04/01 Fr. Augustine MOC

Dear Father, the Grace of God who called you to do His ministry be at your side in all the moments of your service for Him and His people.

BEST WISHES & CONGRATULATIONS ON YOUR ORDINATION ANNIVERSARY!

## FEAST DAYS




**25.01 Conversion of St. Paul**

Fr. Sahaya Chinnappan L.

Fr. Vinoth Paulraj S

Fr. Sahaya Paul

**31.01 Feast of St. John Bosco**

Fr. Bosco Gunaseelan P.

SDB Fathers

Dear Fathers, Your great saints in heaven bring God's love and Grace in your lives. May your ministry and service for His glory be the source of joy to your people! "HAPPY FEAST Dear Fathers"

## NECROLOGY



05.01.79 Fr. Robert Ponnaiah

20.01.12 Fr. S. Joachim

21.01.18 Fr. Annasamy S.A

May God grant them eternal Peace as the reward of their countless priestly ministries on earth! May their souls Rest in Peace!

## TRIBUNAL (December 2024)

**I. The following cases are annulled:**

1. Mr. James Rajkumar (Nettur) Vs Mrs. Gracy (Bodinayakkanur, Madurai).
2. Mrs. Cecil Jose (Iruthayakulam) Vs Mr. Maria Nickson (Vaikalipatti).
3. Mr. Joseph Pascal Kenneth (Shanthinagar) Vs Mrs. Lorette Reno (Vandalur, Chennai).

**II. The following case is admitted and the matrimonial process is on:**

1. Mr. S. Anthoniselvan (Kovilpatti) Vs Mrs.Gnana Soundarya (Thoothukudi).

**Rev. Dr. Fr. Xavier Devasagayam, Judicial Vicar**
Palayamkottai Diocese

## இளைஞர் ஒருங்கிணைந்த விழா
## கோவில்பட்டி மறைவட்டம்
## Youth Unified Fest

நமது மறைமாவட்ட இளைஞர் பணிக்குழுவானது மாபெரும் கிறிஸ்து பிறப்பின் யூபிலி - 2025 ஐ முன்னிட்டு இளைஞர் ஒருங்கிணைந்த விழாவை கொண்டாட திட்டமிட்டுள்ளது. இவ்விழாவானது மூன்று சிந்தனையின் அடிப்படையில் கொண்டாடப்படுகிறது.

1. இயேசுவைக் கொண்டாடுவோம்
2. திருஅவையைக் கொண்டாடுவோம்
3. இளைஞர்களைக் கொண்டாடுவோம்

**One Month – One Vicariate -12 Event** என்ற திட்டத்தின் அடிப்படையில் கோவில்பட்டி மறைவட்ட பங்குகளில் இளைஞர் ஒருங்கிணைந்த விழா கடந்த நவம்பர் மாதத்தில் கொண்டாடப்பட்டன. நவம்பர் மாதத்தின் வார நாட்களில் இயேசுவைக் கொண்டாடுவோம் என்ற தலைப்பில், **Weekend Rosary Challenge, Faith Sharing Challenge, Youth Outreach Challenge** ஆகியவற்றில் கழுகுமலை, காமநாயக்கன்பட்டி, இளையரசனேந்தல், கோவில்பட்டி, வெங்கடாச்சலபுரம், கம்மாபட்டி, புளியம்பட்டி பங்கு இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் இணைந்து காலை செபம், சிறுவர்களுக்கு ஆன்மீகமும், உடல் ஆரோக்கியமும், கல்லறை சுத்தம், கல்லறை தோட்டத்தில் சுமார் 65 பனை விதைகள் விதைத்தல், இறந்த ஆன்மாக்களுக்கான கல்லறை தோட்டத்தில் செபமாலை செபித்தல், அனைத்து புனிதர்களின் சமூக உறவில் 53 மணி செபமாலை செபித்தல், ஆலய சுத்தம் செய்தல், கெபி சுத்தம் செய்தல், பெற்றோர் இளையோர் உறவின் கூடுகை, பங்கின் எதிர்காலத் திட்டத்திற்கு இளையோரின் உதவும் கரங்கள், 110 ஏக்கர் பரப்பளவு கொண்ட மாண்போர்ட் சகோதரர்களின் ஒருங்கிணைந்த சூழியல் பண்ணையில் இளையோரின் இயற்கை ஆர்வம், கிளைக் கிராமத்தில் இளையோரின் நம்பிக்கை பகிர்வும், உறவு வளர்த்தலும், அன்பியங்கள் சந்திப்பு.

இளையோரின் இனிய இல்ல சந்திப்பு, மாலை நேர மறைக்கல்வி புனிதர்கள் அறிவோம், மூத்தோரின் நம்பிக்கை பகிர்வு, முன்னாள், இன்னாள் இளையோர் சந்திப்பு, குழந்தைகளின் குரல் வள திறன் மேம்பாடு. அடுத்த தலைமுறையும், இயற்கை நலன் பேணலும், குழந்தைகளின் உடல் திறன் மேம்பாட்டில் புதிய மைல்கல். அருட்சகோதரியோடு இணைந்து வயதானவர்களுக்கு நற்கருணை வழங்குதல், விளையாட்டும், விண்ணக வார்த்தையும். பீடபூக்களுடன் நிலாச்சோறு, தினம் ஒரு வசனம், மண் சார்ந்த மாலை நேர மழலைகள் விளையாட்டு, மூத்தோர் மறைக்கல்வி, முதியோரின் நம்பிக்கை பகிர்வு, திரை வழி மறைக்கல்வி, மரியின் வழியில் ஒரு மலைப் பயணம், ஆலய தோட்டம் பராமரிப்பு, மண்ணையும், மனங்களையும் குளிர்வித்ததற்கு நன்றி செபம், வழிபாட்டிற்கு வர்ண வரவேற்பு, வழித்துணை வேண்டி செபம், ஆலயம் அறிதல் - தூய பரலோக மாதா பசிலிக்கா காமநாயக்கன்பட்டி, தாயின் நிலா ஒளியில் நிலாச்சோறு, இளம் சிறார்களோடு செபமாலை செபித்தல், வீதி சிறார்களோடு எம் இளையோர், சிறார்களுக்கு இசைமீட்டல் பயிற்சி, முதியோர் நலம் விசாரித்தல், திருப்பாடல் பாடுவோம், தமிழக பசிலிக்கா அறிவோம், உடல் மன ஒன்றிப்பு பயிற்சி, ஆதரவற்ற பெண் குழந்தைகளுடன் உறவு, உழைக்கும் மகளிரை உற்சாகப்படுத்துதல், ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாலை நேர வகுப்பு, சமய, சமுதாய நல்லிணக்க விளையாட்டு, உழைப்பாளர்களின் நலன் வேண்டி செபம், முதியோரின் குரல் கேட்கும் இளையோரின் செவிகள், மரியாயின் சேனையோடு இணைந்து செபமாலை செபித்தல். விவிலிய விளையாட்டு, முதியோருக்கு இறைவார்த்தை அட்டை பகிரல், இளம் பெற்றோரிடம் குழந்தைகளுக்கு இறையச்சம் கற்பித்தல், மரித்த வேதியர் இல்லத்தில் செபம், தலைமைத்துவத்திற்கான வழிகாட்டல் பயிற்சி, வரலாற்று சின்னத்தை தூய்மையாக்கும் கத்தோலிக்க இளைஞர்கள், ஆதி திராவிடர் விடுதியில் மாணவர்களுக்கு நூல் வாசிப்பு பயிற்சி, ஆரோக்கியமான உணவுகள் மற்றும் ஆரோக்கியமில்லாத உணவுகள் பற்றிய அறிவுரை, தொழில் நிலையத்தில் தொழில் வளர்ச்சிக்கு சிறப்பு செபம், மாலை நேர மங்கையர் விளையாட்டு, பாடகர் குழுவினரோடு உணவு ஒன்றிப்பு, இறை இரக்க செபமாலை செபித்தல், கல்வி கற்கும் முறை குறித்து மாணவியருக்கு சிறப்பு வகுப்புகள், சிறுவர்களுக்கு கோ கோ பயிற்சி, மரக்கன்று நடுதல், கைத்தொழில் குறித்து பயிற்சி அளித்தல், நம்பிக்கை

தரும் குழந்தைகளின் காலை செபம், வீதியில் விளையாட்டு, வியாபாரிகளை சந்தித்து செபம், கிறிஸ்து அரசர் ஆசீர் வேண்டி செபம், வெற்றி களிப்பில் சமபந்தி விருந்து, வீரமாமுனிவர் வேண்டுதல் செபம், நோயாளிகள் சந்திப்பு, இயற்கை விவசாயம், கால்நடை வளர்ப்புப் பயிற்சி, திருப்பயணிகள் சந்திப்பு, திருமணமான பெண்களுக்கான உடற்பயிற்சி, திருப்பயணிகளாக செபமாலை செபித்தல், செபமாலை மணிகள் கோர்த்தல் பயிற்சி, மருத்துவ உபகரணங்களை தயார் செய்ய உதவி, பங்கு அலுவலகத்தில் உதவுதல், புனித பொருட்கள் அங்காடியில் உதவுதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டார்கள்.

17.11.2024 அன்று காமநாயக்கன்பட்டி பங்கில் புனித அலாய்சியஸ் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் திருஅவையைக் கொண்டாடுவோம் என்ற தலைப்பில் திருஅவையை அறிவோம் என்ற போட்டியில் வத்திக்கான் சங்க ஏடுகளின் நான்கு ஏடுகளின் தொகுப்பை வாசித்து கேள்வி பதில் எழுதும் போட்டியில் கழுகுமலை பங்கு கிளைக்கிராமம் செட்டிகுறிச்சி, காமநாயக்கன்பட்டி பங்கு கிளைக்கிராமம் எட்டுநாயக்கன்பட்டி, இளையரசனேந்தல் பங்கு மற்றும் கிளைக் கிராமம் நக்கலம்முத்தம்பட்டி, புளியம்பட்டி, கோவில்பட்டி, வெங்கடாச்சலபுரம் பங்கைச் சார்ந்த 11 அணிகள் சார்ந்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் கலந்து கொண்டார்கள். இதில் கழுகுமலை பங்கு முதல் பரிசையும், காமநாயக்கன்பட்டி பங்கு இரண்டாம் பரிசையும், இளையரசனேந்தல் பங்கு மூன்றாம் பரிசையும் பெற்றார்கள்.

17.11.2024 இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளை குறித்து கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் காய்கறிகளை தலைப்பிற்கு ஏற்றாற்போல் படைப்பாற்றலோடு செதுக்குதல் போட்டியில் கழுகுமலை பங்கு, காமநாயக்கன்பட்டி பங்கு மற்றும் கிளைக் கிராமம் எட்டுநாயக்கன்பட்டி, புளியம்பட்டி, கோவில்பட்டி, வெங்கடாச்சலபுரம் மற்றும் இளையரசனேந்தல் பங்கைச் சார்ந்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் கலந்து கொண்டார்கள். இதில் முதல் பரிசை காமநாயக்கன்பட்டி பங்கும், இரண்டாம் பரிசை கழுகுமலை பங்கும், மூன்றாம் பரிசை இளையரசனேந்தல் பங்கைச் சார்ந்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் பெற்றார்கள்

இறைவேண்டலை மையப்படுத்தி நடைபெற்ற ஊமை நாடகத்தில் இளையசரனேந்தல் பங்கு மற்றும் கிளைக்கிராமம் நக்கலம்முத்தம்பட்டி,

கழுகுமலை பங்கு மற்றும் கிளைக்கிராமம் செட்டிகுறிச்சி மற்றும் காமநாயக்கன்பட்டி பங்கு மற்றும் கிளைக் கிராமம் எட்டுநாயக்கன்பட்டி, கோவில்பட்டி, வெங்கடாச்சலபுரம் பங்கு இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் கலந்து கொண்டார்கள். கழுகுமலை பங்கு முதல் பரிசையும், காமநாயக்கன்பட்டி பங்கு எட்டுநாயக்கன்பட்டி இரண்டாம் பரிசையும், கழுகுமலை பங்கு கிளைக்கிராமம் செட்டிகுறிச்சி பங்கு மூன்றாம் பரிசையும் பெற்றார்கள்.

நடனப் போட்டியில் இளையசரனேந்தல், கழுகுமலை மற்றும் கிளைக்கிராமம் செந்தூர், காமநாயக்கன்பட்டி பங்கு மற்றும் கிளைக் கிராமம் எட்டுநாயக்கன்பட்டி, கோவில்பட்டி, வெங்கடாச்சலபுரம் பங்கைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் கலந்து கொண்டார்கள். இதில் காமநாயக்கன்பட்டி பங்கு முதல் பரிசையும், இளையசரனேந்தல் பங்கு இரண்டாம் இடத்தையும், மூன்றாம் இடத்தை கழுகுமலை பங்கும் பெற்றார்கள்.

இளைஞர்களைக் கொண்டாடுவோம் என்ற தலைப்பில் 24.11.2024 அன்று கோவில்பட்டி மறைவட்ட பங்கு இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், காமநாயக்கன்பட்டி பங்கில் புனித அலாய்சியஸ் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் வைத்து நடைபெற்றது. **Cricket, Volley Ball, Throw Ball, Badminton** ஆகிய போட்டிகளை காமநாயக்கன்பட்டி புனித பரலோக அன்னை திருத்தல பேராலய அதிபர் தந்தை அந்தோணி குரூஸ் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. கோவில்பட்டி மறைவட்டத்தில் உள்ள பங்குகளைச் சார்ந்த இளைஞர் மற்றும் இளம்பெண்கள் இப்போட்டிகளில் பங்கேற்றார்கள். கிரிக்கெட் போட்டியில் காமநாயக்கன்பட்டி மற்றும் கிளைக்கிராமம் எட்டுநாயக்கன்பட்டி, குருவிநத்தம், செவல்பட்டி, இளையரசனேந்தல் மற்றும் கிளைக்கிராமம் மேலப்பட்டி, கழுகுமலை, புளியம்பட்டி பங்கு கிளைக்கிராமம் புங்கனூர், குப்பக்குறிச்சி, வெங்கடாச்சலபுரம், வண்டானம், கோவில்பட்டி பங்கைச் சார்ந்த இளைஞர்கள் 12 அணிகளாக பங்கு பெற்றார்கள். **Cricket** போட்டியில் முதல் பரிசை இளையரசனேந்தல் பங்கு கிளைக்கிராமம் மேலப்பட்டி இளைஞர்களும், இரண்டாம் பரிசை புளியம்பட்டி பங்கு கிளைக்கிராமம் புங்கனூர் இளைஞர்களும், மூன்றாம் பரிசை வெங்கடாச்சலபுரம் பங்கு இளைஞர்களும் பெற்றார்கள். **Volley Ball** போட்டியில் காமநாயக்கன்பட்டி பங்கு

மற்றும் கிளைக்கிராமம் எட்டுநாயக்கன்பட்டி, கழுகுமலை பங்கு மற்றும் கிளைக்கிராமம் செட்டிகுறிச்சி, புளியம்பட்டி பங்கில் கிளைக்கிராமம் புங்கனூர் மற்றும் குப்பக்குறிச்சி, இளையரசனேந்தல் பங்கைச் சார்ந்த இளைஞர்கள் பங்கு பெற்றார்கள். முதல் பரிசை கழுகுமலை பங்கும், இரண்டாம் பரிசை புளியம்பட்டி பங்கு கிளைக்கிராமம் புங்கனூர் பங்கும், மூன்றாம் பரிசை காமநாயக்கன்பட்டி பங்கு இளைஞர்கள் பெற்றார்கள். இளம்பெண்களுக்கான **Throw Ball** போட்டியில் கோவில்பட்டி, இளையரசனேந்தல், புளியம்பட்டி, கழுகுமலை மற்றும் கிளைக்கிராமம் செட்டிகுறிச்சி, காமநாயக்கன்பட்டி பங்கு மற்றும் கிளைக் கிராமம் செவல்பட்டி பங்கைச் சார்ந்த இளம்பெண்கள் பங்கு பெற்றார்கள். முதல் பரிசை கழுகுமலை, பங்கும், இரண்டாம் பரிசை புளியம்பட்டி பங்கும், மூன்றாம் பரிசை காமநாயக்கன்பட்டி கிளைக் கிராமம் செவல்பட்டி பங்கு இளம்பெண்களும் பெற்றார்கள்.

இளைஞர்களுக்கான **Badminton** போட்டியில் கழுகுமலை பங்கு மற்றும் கிளைக் கிராமம் செந்தூர் நகர், இளையசரனேந்தல் பங்கு மற்றும் கிளைக் கிராமம் நக்கலமுத்தம்பட்டி, காமநாயக்கன்பட்டி பங்கு மற்றும் கிளைக்கிராமம் எட்டுநாயக்கன்பட்டி, கோவில்பட்டி, வெங்கடாச்சலபுரம் பங்கைச் சார்ந்த இளைஞர்கள் பங்கு பெற்றார்கள். இதில் கழுகுமலை பங்கு முதல் பரிசையும், இளையசரனேந்தல் பங்கு கிளைக் கிராமம் நக்கலமுத்தம்பட்டி பங்கு இரண்டாம் பரிசையும், கழுகுமலை பங்கு கிளைக்கிராமம் செந்தூர் நகர் பங்கு மூன்றாம் பரிசையும் பெற்றார்கள். இளம்பெண்களுக்கான **Badminton** போட்டியில் கழுகுமலை பங்கு மற்றும் கிளைக்கிராமம் செட்டிகுறிச்சி, இளையசரனேந்தல் பங்கு மற்றும் கிளைக் கிராமம் நக்கலமுத்தம்பட்டி, காமநாயக்கன்பட்டி, புளியம்பட்டி, கோவில்பட்டி, வெங்கடாச்சலபுரம் பங்கைச் சார்ந்த இளம்பெண்கள் பங்கு பெற்றார்கள். இதில் முதல் பரிசை புளியம்பட்டி பங்கும், இரண்டாம் பரிசை கழுகுமலை பங்கும், மூன்றாம் பரிசை கழுகுமலை பங்கு கிளைக்கிராமம் செட்டிகுறிச்சி பங்கு இளம்பெண்களும் பெற்றார்கள்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு இளையரசனேந்தல் பங்குத் தந்தை அருட்பணி. சகாய சின்னப்பன், கழுகுமலை பங்குத்தந்தை

அருட்பணி. செல்வின் மற்றும் காமநாயக்கன்பட்டி உதவிப்பங்குத்தந்தை அந்தோணிராஜ் பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள். இளைஞர் மற்றும் இளம்பெண்கள் அனைவரையும் பங்கேற்க ஊக்கப்படுத்திய அனைத்துப் பங்குத்தந்தையர்களுக்கும் நன்றி.

செயலர்

அ. இம்மானுவேல் பிரான்சிஸ் ராஜ்

## கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

### 2024 - டிசம்பர் மாத பணியறிக்கை

**I.** சிறப்புத் தேர்வு, வினாத்தாள்கள் தயாரிப்பு: மறை மாவட்ட அளவில் அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9 முதல் 12 முடிய உள்ள மறைக்கல்வி, நல்லொழுக்க வகுப்பு மாணவர்களுக்கான சிறப்புத் தேர்வு தயாரிப்பு பணிகள் மற்றும் இவ்வகுப்புகளுக்கான வினாத்தாள்கள் தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றது.

**II. SHEPHERD'S SINGING CHRISTMAS CAROLS COMPETITION** - 2024 தொடர்ந்து 4-வது ஆண்டாக மேய்ப்பனின் குரல் பாடல் போட்டி 5 மறைவட்டங்களில் நடத்தி முடிக்கப்பட்டு ஒவ்வொரு மறை வட்டத்திலிருந்தும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடகற் குழுக்களை தேர்வு செய்து அவர்களுக்கான மாபெரும் இறுதிப் போட்டி GRAND FINALE 08.12.2024 ஞாயிற்றுக்கிழமை வி. எம். சத்திரம் புனித அந்தோணியார் CBSE பள்ளியில் வைத்து நமது மறை மாவட்ட முதன்மைக்குரு, பேரருட்திரு. G. குழந்தைராஜ் அவர்கள் தலைமையிலும் மேய்ப்புபணி நிலைய இயக்குனர் அருட்திரு. பீற்றர் அவர்கள் முன்னிலையிலும் நடத்தப்பட்டது. இம்மாபெரும் இறுதிப் போட்டியில் மறைவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட 15 அணிகள் கலந்து கொண்டு தங்கள் பாடல் திறமைகளை வெளிப்படுத்தினர். இசையில் புலமை பெற்ற 5 நடுவர்கள் நடுநிலை தவறாது மதிப்பீடு செய்து இறுதிப் போட்டிக்கு மூன்று அணிகளை தேர்வு செய்தனர். அதன்படி வீரவநல்லூர், சிங்கம்பாறை, வல்லம் ஆகிய மூன்று பாடகர் குழுவினர்கள் முதல் மூன்று இடங்களை வென்று பரிசினை தட்டிச் சென்றனர். வெற்றி பெற்ற குழுவினர்களுக்கு மதிப்பு மிக்க பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும் கலந்து

கொண்ட அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் சிறப்பு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கி உற்சாகப்படுத்தப்பட்டனர். சிறப்பு விருந்தினர்களாக துறவியர் பேரவைத் தலைவர் அருட்திரு. மரியசிங்கராயர் SJ, புனித அன்னாள் பாளை மாநிலத் தலைவி, அருட்சகோதரி ஜாக்குலின் SAT, பாளை தூய இஞ்ஞாசியார் கான்வெண்ட் தலைமைச் சகோதரி Dr. ரோசம்மா ஜான் ஆகியோர்கள் கலந்து கொண்டு வாழ்த்துச் செய்தி வழங்கி முதன்மைகுரு மற்றும் நடுவர்களோடு இணைந்து பாலன் இயேசுவின் பிறப்பை கொண்டாடும் விதமாக கிறிஸ்துமஸ் கேக் வெட்டி மகிழ்ந்தார்கள். செயலர் தந்தை அருட்பணி ச. லூர்து மரிய சுதன் அவர்கள் தனது வரவேற்புரையில் போட்டியாளர்கள், நடுவர்கள், சிறப்பு விருந்தனர்கள் அனைவரையும் வரவேற்று பொன்னாடை அணிவித்து போட்டிக்கான விளக்கங்களையும், விதிமுறைகளையும் வழங்கி சிறப்பித்தார்கள்.

**III. VBS** திட்டமிடல் கூட்டம்: வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ள விடுமுறை விவிலியப்பள்ளி VBS பயிற்சி பாசறை குறித்த திட்டமிடல் கூட்டம் செயலர் தந்தை தலைமையில் நடைபெற்றது.

**IV.** பங்குபணிகள்: 1. ஆவுடையானூர் பங்கின் கிளைக் கிராமங்களில் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவிற்கான திருப்பலி பாடல்களுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது.

2. அருளகம் பங்கு தாட்டான்பட்டி இருதயகுளம் பங்கு புலவன்பட்டி ஆகிய ஊர்களில் திருஇசைபயிற்சியும், திருப்பலிக்கான பாடல்களும் கற்றுக் கொடுக்கப்பட்டன.

அருட்பணி. ச. லூர்து மரிய சுதன்
செயலர்

## TSSS - சரணாலயம்

### டிசம்பர் - 2024 பணியறிக்கை

1. குழந்தைகள் வரவேற்பு பிரிவில் புதிதாக 11 சிறுமியர் மட்டும் இல்லத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கல்வியைத் தொடர்வதற்காக 6 குழந்தைகள் பிற இல்லங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். தற்போது 1 சிறுவர், 4 சிறுமியர் என 5 பேர் உள்ளார்கள்.

2. குழந்தைத் தத்து திட்டத்தில் இம்மாதம் 3 பெண் குழந்தைகள் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது இல்லத்தில் 4 ஆண், 8 பெண் குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படுகின்றனர்.

3. திறந்த நிலைப் புகலிடத் திட்டத்தில் இம்மாதம் 2 பெண் குழந்தை திட்டத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளார். 14 கிராமங்களில் களப்பணி மேற்கொள்ளப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 12 ஆண், 11 பெண் குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படுகின்றனர்.

## சிறப்பு நிகழ்வுகள்

- 20.12.24 அன்று திருநெல்வேலி சமூக சேவை சங்கத்தில் நடைபெற்ற கிறிஸ்து பிறப்பு பெருவிழா நிகழ்ச்சியில் நமது பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.
- 21.12.24 அன்று நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் அவர்களால் இல்ல குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.
- 23.12.24 அன்று கிறிஸ்துமஸ் மற்றும் நன்கொடையாளர்கள் விழா நடைபெற்றது. குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்தது. குழந்தைகளுக்கான புத்தாடைகளை நோவா கார்பன் நிறுவனம் வழங்கியது.

அருட்திரு. அ. ஞானதினகரன்
இயக்குநர்.

# திருநெல்வேலி சமூக சேவை சங்கம் பாளையங்கோட்டை

### டிசம்பர் - 2024 பணியறிக்கை

கோல்பிங் இந்தியா:

- ➢ இத்திட்டத்தின் கீழ் 02.12.2024 அன்று கயத்தாரில் வைத்து இயற்கை சுற்று சூழல் என்ற தலைப்பில் கோல்பிங் குழு மக்களுக்கு கருத்தரங்கு நடைபெற்றது. இதில் 48 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.
- ➢ 09.12.2024 அன்று கருத்தப்பிள்ளையூரில் சுகாதாரமான வாழ்வே நலமான வாழ்வு என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது. இதில் 45 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.
- ➢ 10-11.12.2024 ஆகிய தேதிகளில் தேசிய ஒருங்கிணைப்பு குழு கூட்டம் சென்னை மகாபலிபுரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஓராண்டு செயல்பாடுகளின் மதிப்பாய்வும், வரும் ஆண்டிற்கான

செயல்பாடுகளும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. இதில் நமது இயக்குநர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் கலந்துகொண்டார்கள்.

- கோல்பிங் குழு கூட்டமானது குருவிநத்தம் பேதுரு குழுவிற்கு குழு கூட்டம் நடத்தி தனிகடன் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு நபருக்கு ரூ.20,000 வீதம் மூன்று நபருக்கு ரூ.60,000 கடன் வழங்கப்பட்டது.

## சங்கமம் மற்றும் சிறுகடன் திட்டம்

- சங்கமம் தொடர்பாளர் கூட்டம் அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெற்றது. கணக்காளர்கள் கலந்துகொண்டு சேமிப்பு செலுத்தி கடன் பெற்றுச் சென்றனர். சிறுகடன் திட்டத்தில் இம்மாதம் 20 குழுக்களைச் சார்ந்த 240 நபர்கள் பல்வேறு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடன் பெற்றனர். மேலும் தனிநபர் கடன் இம்மாதம் 395 பேருக்கு கொடுக்கப்பட்டது. மேலும் தணிக்கையானது தென்காசி மற்றும் அம்பை ஆகிய ஒன்றியங்களில் உள்ள 150 குழுக்களுக்கு தணிக்கை நடைபெற்றது.

## நெல்லை சங்கமம்

- நெல்லை சங்கம நிதி நிறுவனத்தில் இம்மாதம் 45 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

## இதர செயல்பாடுகள்

- 19.12.2024 அன்று கயத்தாரில் வைத்து தேசிய விவசாயிகள் உணவு தினம் (டிசம்பர் 23) கொண்டாடப்பட்டது. இதில் சிறுதானியங்கள் கண்காட்சி, பாரம்பரிய சிற்றுண்டிகள் கண்காட்சி மற்றும் நஞ்சு இல்லா உணவே நலமான வாழ்வு என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. கயத்தார் பங்குத்தந்தை அருட்திரு. எரிக் ஜோ கண்காட்சியை திறந்து வைத்தார். இதில் 250 சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை இயக்குநர் தந்தை அவர்கள் வழிநடத்தினார்கள்.
- 20.12.2024 அன்று கிறிஸ்மஸ் விழா நமது ஆயர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. இதில் பாளை மறைவட்ட குருக்கள், சரணாலயம் மற்றும் ஆயர் இருதயராஜ் வளாக குழந்தைகள், பணியாளர்கள் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் கிறிஸ்மஸ் கேக் பகிர்ந்தளிக்கப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டது.

இயக்குநர்
அருட்திரு.**S.**பிரான்சிஸ் சேவியர்
இயக்குநர் - TSSS

# குடும்ப நலவாழ்வுப் பணிக்குழு

**2024 டிசம்பர் பணி அறிக்கை**

1) திருமண முன் தயாரிப்பு பயிற்சி

| | | |
|---|---|---|
| பங்கேற்றவர்கள் : | ஆண்கள் | - 30 பேர் |
| | பெண்கள் | - 38 பேர் |
| மொத்தம் பங்கேற்றவர்கள் | | - 68 பேர் |

2) திருமணத் தகவல் நிலையம்

| | |
|---|---|
| பதிவு செய்தவர்கள் | - 24 பேர் |
| பார்வையிட்டவர்கள் | - 60 பேர் |
| திருமண ஏற்பாடாகியுள்ளோர் | - 09 பேர் |

3) திருமண முன் தயாரிப்பு பயிற்சி விபரம்

| | |
|---|---|
| ஜனவரி 2025 | 03, 04.01.2025 - முதல் வெள்ளி, சனிக்கிழமை<br>காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை<br>17, 18.01.2025 - மூன்றாம் வெள்ளி, சனிக்கிழமை<br>காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை |
| பிப்ரவரி 2025 | 07, 08.01.2025 - முதல் வெள்ளி, சனிக்கிழமை<br>காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை<br>21, 22.01.2025 - மூன்றாம் வெள்ளி, சனிக்கிழமை<br>காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை |

அன்புடன்,
அருட்தந்தை ஜெமல்ஸ் ஜேம்ஸ்,
செயலர்.

# நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு அறிக்கை

**டிசம்பர் - 2024 பணியறிக்கை**

எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் காலை 10.30 மணி முதல் மதியம் 01.30 வரை குணமளிக்கும் சிறப்பு செபம், தூய அந்தோணியார் மறைமாவட்ட திருத்தல மண்டபத்தில் வைத்து நடத்தப்பட்டது. 3வது ஞாயிறு உபவாசகூட்டம் 15.12.24 காலை 11 மணி முதல் மாலை

04.30 மணி வரையும் முழுஇரவு திருவிழிப்பு செபம் 28.12.24 அன்றும் நடைபெற்றது. அருட்திரு. ஜெமல்ஸ் திருப்பலி நிறைவேற்றினார். அருட்சகோதரி நிர்மலா, குளுணி சபை, கோவை இறைசெய்தி வழங்கினார். 08.12.24 அன்று தூய அன்னம்மாள் முதியோர் இல்லத்தில் கிறிஸ்மஸ் பகிர்வு விழா மேதகு.A.ஜூடு பால்ராஜ் D.D. தலைமையில் நடைபெற்றது. புத்தாடைகள் வழங்கி மதிய உணவுடன் கூட்டம் செபத்துடன் இனிதே முடிவுற்றது. வழக்கம் போல் திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் வீட்டு செபக்கூட்டம் புதன்கிழமைகளில் விவிலிய பகிர்வுக் கூட்டம், வியாழக்கிழமைகளில் பெண்கள் செபக் கூடுகையும், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கிராமங்களில் நற்செய்தி அறிவிப்புக் கூட்டமும் நடைபெற்றது. முதல் ஞாயிறு ஊழியர் கூட்டம் கத்தோலிக்க நற்செய்தி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. Whatsapp மூலமாக செபவிண்ணப்பங்கள் அனுப்பி செபிக்கப்பட்டது. பாளையங்கோட்டையை சுற்றியுள்ள பங்குகளில் உள்ள இறைமக்களுக்கு தங்க வசனக் காலண்டர் அச்சடித்து, தினமும் இறைவார்த்தையை வாசிக்கவும் திருப்பலி வாசகங்களுக்கு முன்தயாரிப்பாகவும் இருக்கவும் விநியோகிக்கப்பட்டது. கடவுளுக்கு நன்றி!

ஆங்கில மாதத்தின் முதல்சனி (07.12.24) தென்காசி புனித மிக்கேல் திருத்தலத்திலும், புனித அந்தோணியார் ஆலயம் இலப்பையூரணி (கோவில்பட்டி) மற்றும் சென்னை புனித தோமையார் மலை MSFS இல்லத்தில் ஆசீர்வாத உபவாசக்கூடுகை நடைபெற்றது. மாதத்தின் 2ம்சனி (14.12.24) அம்பை புனித சூசையப்பர் ஆலயத்திலும், புதுவாழ்வு தியான நிலையத்தில் விடுதலை திருவிழிப்பு செபமும் நடைபெற்றது. மாதத்தின் 3ம்சனி (21.12.24) காரவிளை (நாகர்கோவில்) புனித சூசையப்பர் ஆலயம், இருதயநகர் (திருநெல்வேலி) திரு இருதய ஆண்டவர் ஆலயத்திலும் ஆசீர்வாத உபவாசக் கூடுகையும், கிறிஸ்துமஸ் பகிர்வு விழாவும் நடைபெற்றது. 22.12.24 ஞாயிறு புதுவாழ்வு தியான நிலையத்தில் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை. S. அந்தோணிராஜ் அவர்கள் தலைமையில் கிறிஸ்துமஸ் பகிர்வுவிழா சிறப்பாக நடைபெற்றது. முழுநேரமாய் பணியாற்றும் பணியாளர்களுக்கு புதிய ஆடைகளும், பணக்கொடையும், ஏழை, எளிய மக்களுக்கு புதிய கடைகளும் வழங்கப்பட்டது. 27.12.24 வெள்ளி முதல் 30.12.24 திங்கள் வரை உள்ளிருப்புத் தியானம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. புதுவாழ்வு தியான நிலையத்தில் பரிந்துரை செபமும், தேடி வருகின்ற

குடும்பங்களுக்கு ஆற்றுபடுத்துதலும், விசுவாசத்தில் நிலைத்திருக்க செபப்பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றது. தூய ஆவியில் புதுவாழ்வு மாத இதழ் 4000 குடும்பங்களுக்கு அனுப்பப்பட்டது.

01.12.24 பேட்டை பங்கு திருப்பணி கரிசல்குளம் கிராம ஊழியம். 03.12.24&04.12.24 சிங்கம்பாறை பங்கு அரியநாயகிபுரம் கிராமம் கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் ஊழியம். 05.12.24 திருநெல்வேலி அரசு பொது மருத்துவமனை ஊழியம். 07.12.24 சேவியர்காலனி பங்கு கருங்குளம் கிராமத்தில் ஊழியம். 11.12.24 பாளை மறைமாவட்டம் மேய்ப்புப்பணிநிலையம் - சாந்திநகர் மறைமாவட்ட முதன்மைகுரு பேரருள் தந்தை குழந்தைராஜ் அவர்கள் தலைமையில் நடந்த பணிக்குழுக்களின் ஒருங்கிணைந்த கிறிஸ்மஸ் விழாவில் பங்கேற்பு. 13.12.24 திருநெல்வேலி அரசு சிறப்பு பொது மருத்துவமனை ஊழியம். 16.12.24 சங்கரன்கோவில் பங்கு சத்திரக்கொண்டான் கிராம ஊழியம். 19.12.24 நெல்லை மாவட்டம் மானூர் யூனியன் குப்பன்னாபுரம் கிராமத்தில் கிறிஸ்மஸ் விழா. 20.12.24 அலவந்தான்குளம் பங்கு திருமதி அல்போன்ஸா அவர்கள் இல்லத்தில் ஆறுதல் செபவழிபாடு. 22.12.24 அம்பை பங்கு பிரம்மதேசம் கிராமத்தில் ஊழியம். 23.12.24 பாப்பாகுடி யூனியன் செங்குளம் கிராமத்தில் கிறிஸ்மஸ் விழா. 26.12.24 சிங்கம்பாறை பங்கு மைலப்புரம் இல்லம் சந்திப்பு ஊழியம். 28.12.24 அலவந்தான்குளம் கிராம ஊழியம். 29.12.24&30.12.24 2024 ஆண்டு முழுவதும் இறைவன் செய்த நன்மைக்காய் ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து நன்றி செலுத்தி செபவழிபாடு. மேலும் சிறுவர் ஊழியம், வாலிபர் ஊழியம், இல்லம் சந்திப்பு ஊழியம், கடிதம் ஊழியம், ஆற்றுப்படுத்தும் பணி இவைகள் இறையரசு நற்செய்தி குழு மூலமாக நடைபெறுகிறது.

அருள்பணி **V.K.S.** அருள்ராஜ்,
செயலர்.

## அன்பிய பணிக்குழு

### 2024 டிசம்பர் பணியறிக்கை

ஜனவரி மாதம் அன்பிய மாதமாக தமிழக அளவில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துபிறப்பின் யூபிலி - 2025ம் ஆண்டில், “எதிர்நோக்கின் திருப்பயணத்தில் அன்பியங்கள்” என்ற தலைப்பில வழிபாட்டை சிறப்பிக்கவும், செயல்படவும் தமிழக அன்பிய பணிக்குழு அழைப்பு விடுக்கிறது. சுவரொட்டிகள், வழிபாட்டு குறிப்புக்கள் 22.12.2024 தேதியிட்டு அனைத்து பங்குகளுக்கும் தபால் மூலம் அனுப்பி

வைக்கப்பட்டுள்ளன. அருட்தந்தையர்கள் தயவு கூர்ந்து அன்பிய மாதத்தில் அன்பிய பொறுப்பாளர்களை உற்சாகப்படுத்தி, அன்பிய குடும்பங்களை ஒருங்கிணைத்து, ஞாயிறு வழிபாட்டினை சிறப்பு செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் பங்கு அளவில் இம்மாதம் அன்பிய பொறுப்பாளர்களுக்கு கூட்டம் (ஒருங்கிணைப்பு கூட்டம்) நடத்தி அன்பிய செயல்பாடுகளை ஆய்வு செய்து புதிய உற்சாகத்துடன் செயல்பட, ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் வழங்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அருட்பணி. அ.பீற்றர்

செயலர்.

## அருட்பணிக் குழுக்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம் & கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம்

அருட்பணிக் குழுக்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம்:

பாளை மறைமாவட்ட அருட்பணிக் குழுக்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம் 11.12.2024 புதன்கிழமை காலை 10 மணிக்கு குருகுல முதல்வர் பேரருட்திரு.G.குழந்தைராஜ் அவர்கள் தலைமையில் யூபிலி மேய்ப்புபணி நிலையம், தேம்பாவணி தோட்டத்தில் வைத்து நடைபெற்றது. பணிக்குழுக்களில் பணியாற்றும் பணியாளர்கள் இறை வணக்க பாடல் பாடினார்கள். பெண்கள் பணிக்குழு செயலர் திருமதி.லில்லி ஆனந்த் அவர்கள் நற்செய்தியை வாசித்தார்கள். மரியாயின் சேனை கொமித்சிய தலைவி திருமதி.நிர்மலா ஜார்ஜ் அவர்கள் இறைவேண்டல் செய்தார்கள். இறைவேண்டலைத் தொடர்ந்து, ஒருங்கிணைப்பாளர் அருட்பணி.அ.பீற்றர் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். தொடர்ந்து, கடந்த கூட்ட அறிக்கையினை வாசித்து சமர்பித்தார்கள். பணிக்குழுக்களின் செயல்பாடுகளை செயலர்கள் அறிக்கைகளாக சமர்பித்தனர். பணிக்குழுக்களின் அறிக்கையினைத் தொடர்ந்து, அதனைச் சார்ந்து எழுப்பப்பட்ட வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டது. தலைவர், குருகுல முதல்வர் பேரருட்திரு.G.குழந்தைராஜ் அவர்கள் பணிக்குழுக்களின் அறிக்கைகள் சிறப்பாக அமைந்தது எனவும், செயலர்களின் பணிகளை பாராட்டியும் பேசினார்கள். பணிக்குழுக்களின் செயல்பாடுகளில் பங்குத்தந்தையரின் ஒத்துழைப்பின் அவசியத்தை சுட்டிக்காட்டினார்கள்.

## கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம்:

பாளை மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்திரு.G.குழந்தைராஜ் அவர்கள் தலைமையில் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் மதியம் 12.30 மணி அளவில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியின் முதல்வர் அருள்முனைவர். காட்வின் ரூபஸ் சே.ச அவர்கள் கலந்து கொண்டார்கள். தொடக்க நிகழ்வாக செயலக முதல்வர் அருள்முனைவர்.F.ஞானப்பிரகாசம் அவர்கள் கிறிஸ்து பிறப்பு செய்தி வழங்கினார்கள். அருட்சகோ.மோட்சம் அவர்களின் ஒருங்கிணைப்பில், பணிக்குழுக்களில் பணியாற்றும் பணியாளர்கள் கிறிஸ்துமஸ் கீதம் பாடினார்கள். அதனைத் தொடர்ந்து குருகுல முதல்வர் அவர்கள் கிறிஸ்துமஸ் கேக் வெட்டினார்கள். சிறப்பு விருந்தினர் அருள்முனைவர். காட்வின் ரூபஸ் சே.ச அவர்கள், தனது சிறப்பு செய்தியில், இயேசு ஒரு ஆயனாக குழந்தையாக பிறந்தார். அவர் தன் மந்தையின் குரலுக்கு செவிசாய்க்கின்றவராக (Heed), மந்தையின் உள்ளார்ந்த உணர்வுகளை அறிந்தவராக(Need), மந்தையை பண் படுத்துவராக(Knead), உணவளிப்பவராக(Feed) செயல்பட்டார். மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியை கொண்டு வந்தார். நாமும் நம் குடும்பங்களில், சமூகத்தில், சகோதர சகோதரிகளின் உணர்வுகளுக்கு செவி சாய்ப்பவர்களாக, அவர்களை புரிந்து கொண்டு அன்பு செய்கின்றவர்களாக, அனைவரின் வாழ்விலும் மகிழ்ச்சியை கொண்டு வரும் கருவிகளாக செயல்பட அழைப்பு விடுத்தார்கள். நமது மறைமாவட்டத்தில் பணியாற்றும் வேதியர்கள் அருமையான கிறிஸ்துமஸ் கீதத்தை வழங்கினார்கள். விழாத் தலைவர் பேரருட்திரு.G.குழந்தைராஜ் அவர்கள் பகிர்வின் வழியாக கிறிஸ்துவை போன்று மற்றவர்களின் வாழ்வில் மகிழ்ச்சியை கொண்டுவர முடியும் என குறிப்பிட்டார்கள். தொடர்ந்து குருகுல முதல்வர் அவர்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் பரிசு வழங்கினார்கள். இந்நிகழ்வு பாப்பிறை பண்ணுடன் நிறைவுக்கு வந்தது.

அருட்பணி.அ.பீற்றர்
ஒருங்கிணைப்பாளர்

**This Month Collection,**

## DIOCESAN MAINTENANCE FUND

**Rev.Fr. S.A. Antonysamy, Procurator**

# பணி நிறைவு பெற்றோர் பேரவை
# கிறிஸ்து பிறப்பு பெருவிழா

**தூய சவேரியார் பேராலயப் பங்கு, பாளையங்கோட்டை**

இன்று 21.12.2024 சனிக்கிழமை அன்று தூய சவேரியார் பேராலயப் பங்கின் பணி நிறைவு பெற்றோர் பேரவை கிறிஸ்து பிறப்பு விழாவை மிகச் சிறப்பாக கொண்டாடினார்கள். காலை 10 மணிக்கு திருப்பலியுடன் விழா நிகழ்வு துவங்கியது. திருப்பலியை தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளியின் செயலர் அருட்தந்தை ஆல்பர்ட் ஜோசப் நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து பேராலய வளாக அரங்கில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிக்கு திருவைகுண்டம் குமரகுருபரர் கலைக்கல்லூரியின் மேனாள் இயற்பியல் துறை தலைவர் பேராசிரியர் அருள் அல்போன்ஸ் தலைமை தாங்கி தலைமை உரை வழங்கினார். திருமதி. அல்போன்சா திருப்பாடல் வாசித்தார். அருட்தந்தை ஆல்பர்ட் ஜோசப் கிறிஸ்து பிறப்பு செய்தியை வழங்கினார். அருட்சகோதரி ரெக்சிடா வாழ்த்துரை வழங்கினார்.

முன்னதாக பேரவையின் தலைவர் நல்லாசிரியர் திரு.க.ஞா.சாண் பீட்டர் வந்திருந்தவர்களை வரவேற்றார். செயலர் திரு.சிலுவை ஜோசப் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். விழாவில் எளியோருக்கு வேஷ்டிகள் சேலைகள் வழங்கப்பட்டன. இறுதியில் பேரவையின் பொருளர் திரு.அந்தோணி ராஜ் நன்றி கூறினார். விழாவின் முத்தாய்ப்பாக திரு.செல்வராஜ், திருமதி.வேலன்சியா ஆகியோர் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமணிந்து ஆடிப்பாடி மக்களை மகிழ்வித்தனர். விழா முடிவில் அனைவரும் விருந்துண்டு மகிழ்ந்து சென்றனர். விழாவில் திரு.ஜான் இருதயராஜ், பேராசிரியர் சேவியர் அமல்ராஜ், திரு.அந்தோணிசாமி, துணைத் தலைவர் திருமதி.ரெஜினா மேரி, திரு.ஜான் ஜோசப், திரு.ஜெலஸ்டின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தலைவர்
நல்லாசிரியர், திரு.க.ஞா.சாண் பீற்றர்

## Bination Masses Received July'2024 To December'2024:

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. Maria Francis P. | 13,000.00 |
| 2 | Rev. Fr. Moyeeson M. | 10,700.00 |
| 3 | Rev. Fr. Michael Makesh A. | 10,600.00 |
| 4 | Rev. Fr. Emmanuel Jegan Raja | 10,400.00 |

| | | |
|---|---|---|
| 5 | Rev. Fr. Arul Antony S. | 10,000.00 |
| 6 | Rev. Fr. Santiago J. | 6,500.00 |
| 7 | Rev. Fr. Jeeva A. | 6,200.00 |
| 8 | Rev. Fr. Joseph Raj S. | 5,800.00 |
| 9 | Rev.Fr. Arul Maria Nathan J. | 5,400.00 |
| 10 | Rev. Fr. Anto P. | 5,000.00 |
| 11 | Rev. Fr. Jeyabalan A. | 5,000.00 |
| 12 | Rev. Fr. Antonysamy S.A. | 4,800.00 |
| 13 | Rev. Fr. Vinoth Paulraj S. | 4,300.00 |
| 14 | Rev. Fr. Xavier S. | 4,200.00 |
| 15 | Rev. Fr. Santiago S. | 3,700.00 |
| 16 | Rev. Fr. Antonyraj S. | 3,600.00 |
| 17 | Rev. Fr. Arockiaraj I. | 3,600.00 |
| 18 | Rev. Fr. Deepak Michael Raja C. | 3,000.00 |
| 19 | Rev. Fr. Gnana Dhinakaran P. | 3,000.00 |
| 20 | Rev. Fr. Antonyraj M. | 2,900.00 |
| 21 | Rev. Fr. Mickel Samy V. | 2,800.00 |
| 22 | Rev. Fr. Leo Gerald | 2,700.00\ |
| 23 | Rev. Fr. Michaelraj M. | 1,700.00 |
| 24 | Rev. Fr. Selvin R. | 1,500.00 |
| 25 | Rev. Fr. Arul Alexander A. | 1,500.00 |
| 26 | Rev. Fr. Arul M. Arockiam | 800.00 |
| 27 | Rev. Fr. Alphonse S. | 800.00 |

## Surplus Masses Received July'2024 to Dec'2024:

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. Joseph Johnson S. | 2,87,700.00 |
| 2 | Rev. Fr. Motcharajan M. | 2,53,500.00 |
| 3 | Rev. Fr. Antony A. Cruz | 1,60,000.00 |
| 4 | Rev. Fr. V.K.S. Arulraj | 55,000.00 |
| 5 | Rev. Fr. Arul Antony S. | 55,000.00 |
| 6 | Rev. Fr. Emmanuel Jegan Raja A. | 50,000.00 |

| | | |
|---|---|---|
| 7 | Rev. Fr. Bosco Gunaseelan P. | 36,100.00 |
| 8 | Rev. Fr. Xavier Raj Y. | 33,100.00 |
| 9 | Rev. Fr. Moyeeson M. | 32,000.00 |
| 10 | Rev. Fr. Vinoth Paulraj S. | 31,500.00 |
| 11 | Rev. Fr. Maria Francis P. | 20,000.00 |
| 12 | Rev. Fr. Antonyraj S. | 15,200.00 |
| 13 | Rev. Fr. Xavier S. | 14,500.00 |
| 14 | Good News Group, Palayamkottai | 10,600.00 |
| 15 | Rev. Fr. Michaelraj C.P | 10,000.00 |
| 16 | Rev. Fr. Arockiyaraj I. | 5,000.00 |
| 17 | Rev. Fr. Joseph Rajan S. | 3,700.00 |

# இந்திய சிறைப்பணி - தமிழ்நாடு
# பாளையங்கோட்டை மறைமாவட்டம்

## 2024 - டிசம்பர் சிறைப்பணி அறிக்கை

07.12.2024 சனிக்கிழமை காலை 10 மணியளவில் பாளையங்கோட்டை கிறிஸ்து ராஜா மேல்நிலைப்பள்ளி வளாகம் சகோதரர் கல்விக்கழக பவளவிழா அரங்கில் பாளையங்கோட்டை, தூய சவேரியார் கல்லூரி, அருட்திரு. பிரான்சிஸ் தம்புராஜ், சேசு சபை அவர்களால் பாளை மறைமாவட்ட சிறைப்பணி தன்னார்வ பணியாளர்களுக்கு ஆற்றுப்படுத்துதல் மற்றும் தியானப் பயிற்சி ஒருநாள் பயிற்சிப் பாசறை நடத்தப்பட்டது. சிறைச்சாலைகளில் தன்னார்வ பணியாளர்களின் அனுபவம் மற்றும் சவால்கள் பகிரப்பட்டது. அருட்சகோதரர், அருட்சகோதரிகள், தன்னார்வ பணியாளர்கள் 22 பேர் பங்கெடுத்து பயனடைந்தனர்.

11.12.2024 புதன்கிழமை காலை 10 மணியளவில் தேம்பாவணித்தோட்டம் ஆயர் இருதயராஜ் கலையரங்கில் பேரருட்திரு G. குழந்தைராஜ், குருகுல முதல்வர் தலைமையில் நடைபெற்ற மறைமாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் திருமதி. A. லீமா ரோஸ்மேரி, பொருளாளர் கலந்து கொண்டு ஆகஸ்ட் 24 முதல் நவம்பர் 2024 சிறைப்பணி அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

14.12.2024 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் கொக்கிரகுளம் பெண்கள் தனிக்கிளைச்சிறையில், சிறைக் கண்காணிப்பாளர் திருமதி. வசந்தி தலைமையில் சிறைப்பணி ஒருங்கிணைப்பாளர் அருட்திரு. F. ஞானப்பிரகாசம் முன்னிலையில் 27 இல்லவாசிகளுடன் கிறிஸ்து பிறப்பு பெருவிழா கொண்டாடப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் தந்தை கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்கள். இல்லவாசிகள் மற்றும் அனைவருக்கும் கேக் மற்றும் இனிப்பு, காரம் வழங்கப்பட்டது. இல்லவாசிகளை உற்சாகப்படுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. அனைவருக்கும் துண்டு வழங்கப்பட்டது. திருமதி. S. ஏஞ்சலா, செயலர் நன்றி தெரிவித்தார்கள். 13 தன்னார்வ பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

18.12.2024 புதன்கிழமை மாலை 3 மணியளவில் அம்பாசமுத்திரம் கிளைச்சிறை சிறைவாசிகளுடன் கிறிஸ்து பிறப்பு பெருவிழா கொண்டாடப்பட்டது. கல்லிடைக்குறிச்சி பங்குதந்தை அருட்திரு. அருள் அந்தோணி மற்றும் ஒருங்கிணைப்பாளர் அருட்திரு. F. ஞானப்பிரகாசம் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினர். சிறைவாசிகள்/இல்லவாசிகள் சில குறிப்புகளை பார்த்து நீதிக் கதைகளை கூறினர். அனைவருக்கும் துண்டு வழங்கப்பட்டது. கேக், மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. சிறை கண்காணிப்பாளர் திரு. கணேசன் வாழ்த்துரை வழங்கினார்கள். அருட்சகோதரி. அருள்மேரி C.I.C, தன்னார்வ பணியாளர்கள் திரு. ஜாண் பிரிட்டோ, திரு. இருதய ராஜ், திரு. ராஜா ஆகியோர் பங்கெடுத்து சிறப்பித்தனர்.

21.12.2024 சனிக்கிழமை காலை 10 மணியளவில் பாளை கிறிஸ்து ராஜா மேல்நிலைப்பள்ளி வளாகம், BEU பவள விழா அரங்கில், தண்டனை சிறைவாசிகளின் குழந்தைகள் மற்றும் தண்டனை நிறைவுற்று விடுதலை பெற்ற சிறைவாசிகள் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழா பாளையங்கோட்டை மறைமாவட்ட மேதகு ஆயர் முனைவர் ச.அந்தோனிசாமி D.D., D.C.L., ஆண்டகை தலைமையில் திரு ஜாண் கென்னடி, சிறை நலத்துறை அதிகாரி, பாளையங்கோட்டை முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதல் வகுப்பு முதல் கல்லூரி மற்றும் உயர்கல்வி வரை பயிலும் 29 மாணவ மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் அருட்திரு F. ஞானப்பிரகாசம் அனைவரையும் வரவேற்றார்கள். தலைவர் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

பாளை மத்திய சிறை அதிகாரிகள் திரு. ஜாண் கென்னடி மற்றும் திரு. பழனிவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அருட்சகோதரி மேரி ஜாய்ஸ் மேரி, மரிய நட்சத்திர மாநில தலைவி, மரியின் ஊழியர் சபை, சிறப்புரையாற்றினார்கள். பாளை மறைமாவட்ட மேதகு ஆயர் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கி தலைமையுரையாற்றினார்கள். அருட்சகோதரி நிர்மலா நன்றி தெரிவித்தார்கள். திருமதி. S. ஜேசு மெர்சி ஏஞ்சலா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். ஒருங்கிணைப்பாளர் அருட்திரு F. ஞானப்பிரகாசம் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

21.12.2024 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் பாளையங்கோட்டை மத்திய சிறையில் சிறைவாசிகளுடன் கிறிஸ்து பிறப்பு பெருவிழா கொண்டாடப்பட்டது. தன்னார்வ பணியாளர் திரு கஸ்பார், திரு. விக்டர் ராஜ் அருட்சகோதரர் சார்லஸ் மற்றும் அருட்சகோதரிகள் பங்கெடுத்து சிறப்பித்தனர். அருட்திரு F. ஞானப்பிரகாசம் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்கள். திருமிகு G.B. செந்தாமரை கண்ணன், சிறை கண்காணிப்பாளர், மத்திய சிறை பாளையங்கோட்டை சிறப்புரையாற்றினார்கள். 1800 சிறைவாசிகளுக்கு இனிப்பு மற்றும் காரம் வழங்கப்பட்டது.

22.12.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தென்காசி கிளைச்சிறை 19 இல்லவாசிகள்/சிறைவாசிகளுடன் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் தந்தை கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்கள். அனைவருக்கும் கேக் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் துண்டு வழங்கப்பட்டது. சிறைக்கண்காணிப்பாளர் வாழ்த்துரை வழங்கினார்கள். அருட்சகோதரி குணசீலி பாலரதி, தன்னார்வ பணியாளர் திரு. டெரன்ஸ் வினோஜ் பங்கெடுத்து சிறப்பித்தனர்.

23.12.2024 திங்கட்கிழமை காலை 11 மணியளவில் சங்கரன்கோவில் கிளைச்சிறையில் 12 சிறைவாசிகளுடன் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் தந்தை கிறிஸ்து பிறப்பு செய்தி வழங்கினார்கள். அருட்சகோதரி அருள்மேரி, திரு. அந்தோணி குரூஸ் தன்னார்வ பணியாளர் கிறிஸ்மஸ் பாடல் பாடி மகிழ்வித்தனர். அனைவருக்கும் கேக், சிற்றுண்டி மற்றும் துண்டு வழங்கப்பட்டது. சிறைக்கண்காணிப்பாளர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

23.12.2024 திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் கோவில்பட்டி கிளைச்சிறையில் 33 இல்லவாசிகள்/சிறைவாசிகளுடன் ஒருங்கிணைப்பாளர் தலைமையில், சிறை கண்காணிப்பாளர் முன்னிலையில் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் அருட்திரு F. ஞானப்பிரகாசம் மற்றும் அருட்சகோதரி அருள்மேரி C.I.C கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினர். அனைவருக்கும் கேக், சிற்றுண்டி மற்றும் துண்டு வழங்கப்பட்டது. மருத்துவர் திரு.கார்த்திகேயன், தன்னார்வ பணியாளர்கள் திரு. சவரிராஜ், திரு. மைக்கேல், அருட்சகோதரி. ஜெனிமலர் ஆகியோர் பங்கெடுத்து சிறப்பித்தனர்.

அன்புடன்,

செயலர்
திருமதி. S. ஜேசு மெர்சி ஏஞ்சலா

பொருளாளர்
திருமதி. A. லீமா ரோஸ்மேரி

ஒருங்கிணைப்பாளர்
அருட்திரு.F.ஞானப்பிரகாசம்

## ஆயரின் நல நிதிகள்

**டிசம்பர் - 2024**

| குருமாணவர் நிதி | |
|---|---|
| SHJ Generalate, Palayamkottai | 10,000.00 |
| CIC Provincialate, Jawahar Nagar | 5,000.00 |
| ஜே. மனோஜ், A. V. K. தீபா டெக்ஸ், சேர்ந்தமரம் | 5,000.00 |
| A. ஜோஸ்பின் ஜெகதீஷ், கே.டி.சி. நகர் | 5,000.00 |
| Bethlemite Sisters, Caussanel Nagar | 3,000.00 |
| திரு. பிரான்சிஸ், மைசூர் | 3,000.00 |
| இம்மானுவேல் அன்பியம், இஞ்ஞாசிநாடாரூர் | 1,000.00 |
| அடைக்கல மாதா அன்பியம், இஞ்ஞாசிநாடாரூர் | 1,000.00 |
| அந்தோனியார் அன்பியம், இஞ்ஞாசிநாடாரூர் | 1,000.00 |
| எலிசபெத் பிலிப், பாளையங்கோட்டை | 1,000.00 |
| இறைமக்கள், இஞ்ஞாசிநாடாரூர் | 900.00 |
| P. அனுஷியா, இஞ்ஞாசிநாடாரூர் | 500.00 |
| P. நேசம், இஞ்ஞாசிநாடாரூர் | 500.00 |
| தூய ஜார்ஜியார் அன்பியம், பாளையங்கோட்டை | 500.00 |

| | |
|---|---|
| எசாயா மண்டலம், பாளையங்கோட்டை | 500.00 |
| இனிகோ அன்பியம், பாளையங்கோட்டை | 500.00 |
| மொத்த இருப்புத்தொகை | 38,400.00 |
| இம்மாதம் வழங்கியது | **38,400.00** |
| **ஏழை மாணவர் கல்வி நிதி** | |
| CFMSS Sisters, Pavoorchatram | 10,000.00 |
| JMJ Sisters, Kallidaikurichi | 5,000.00 |
| ICM Sisters, Palayamkottai | 5,000.00 |
| FSAG Sisters, Pettai and Avudayanoor | 2,500.00 |
| ஆசிரியர்கள், புனித ஜோசப் கலைமனைகள், வெய்க்காலிப்பட்டி | 2,000.00 |
| SMI Sisters, Shanthi Nagar | 1,000.00 |
| ஆசிரியர்கள், புனித சவேரியார் நடுநிலைப்பள்ளி, வண்டானம் | 1,000.00 |
| முன் கையிருப்பு | 3,96,912.00 |
| மொத்தக் கையிருப்பு | 4,23,412.00 |
| இம்மாதம் வழங்கியது | 1,15,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | **3,08,412.00** |
| **குடும்ப நல நிதி** | |
| மொத்தக் கையிருப்பு | 6,01,647.00 |
| இம்மாதம் வழங்கியது | 20,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | **5,81,647.00** |
| **மருத்துவ நல நிதி** | |
| மொத்த இருப்புத்தொகை | **1,19,496.00** |
| **நற்செய்திப் பணி நிதி** | |
| மொத்த இருப்புத்தொகை | **2,09,749.00** |
| **விவிலிய நிதி** | |
| மொத்த இருப்புத்தொகை | **1,58,620.00** |
| **மறைமாவட்ட சிறப்பு நிதி** | |
| திருப்பலி வழியாக | 43,000.00 |
| இறைமக்கள், தெற்கு தீத்தாம்பட்டி | 2,100.00 |
| பேராலய இறைமக்கள், பாளையங்கோட்டை | 1,100.00 |
| இறைமக்கள், அச்சங்குளம் | 600.00 |
| வண்டானம் மக்கள் நலச் சங்கம் | 500.00 |

# BISHOP EMERITUS JUDE PAULRAJ'S ENGAGEMENTS

**January - 2025**

| Date | Time | Programme |
|---|---|---|
| 01.01.2025 | 12.05 AM | New Year Mass, St. Antony's Shrine |
| 03.01.2025 | 11.00 AM | Mass, Udayarpatty |
| 04.01.2025 | 10.30 AM | First Holy Communion Mass, Thanjavur |
| 05.01.2025 | 06.00 PM | Flag Hoisting and Mass, Shanthinagar |
| 06.01.2025 | 10.30 AM | Wedding Mass, Perumanal |
| 10.01.2025 | 09.30 AM | Wedding Mass, Pavoorchatram |
| 12.01.2025 | 11.30 AM | Thanks giving Mass, Pavoorchatram Convent |
| 15.01.2025 | 06.00 PM | Mass, West Matrianathapuram |
| 17.01.2025 | 09.00 AM | Wedding Mass, St.Antony's Shrine |
| 18.01.2025 | 11.00 AM | 1st Death Anniversary Mass, Votive Shrine Chennai |
| 22.01.2025 | 05.00 PM | Nam Vazhvu Golden Jubilee Mass, Madurai |
| 23.01.2025 | 11.00 AM | Family get together, Trichy |
| 26.01.2025 | 07.30 AM | Feast Mass, Visuvasapuram |
| 28.01.2025 | 06.30 PM | Novena Mass, Kadiapatnam |
| 30.01.2025 | 09.30 AM | Wedding Mass, Anaikkadu |
| 31.01.2025 | 10.00 AM | House Blessing, Avudayanoor |
| | 06.30 PM | Flag Hoisting and Mass, Subramaniapuram, Trichy |

## Blessing of Nursing Home, Meenthulli, 14.12.2024






## Prison Ministry, Palayamkottai, 21.12.2024





## Major Seminarians Get-together, Palayamkottai, 27.12.2024







Publication of "Guiding Light: Reflections from Shepherd",
14.12.2024





Jubilee 2025 Inauguration Mass,
St. Francis Xavier's Cathedral, Palayamkottai, 29.12.2024









**For Private Circulation only**
Edited & Published by
Rev. Fr. F. GNANAPRAGASAM
CHANCELLOR, CATHOLIC BISHOP'S HOUSE, P.B.No. 108, PALAYAMKOTTAI-2
e-mail : chancellor@palaymkottaidiocese.org
Web : www.palayamkottaidiocese.org